பெறுநர் 18-05 2015

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம்,
#.144, அண்ணா சாலை,
சென்னை – 600 002

ஐயா.

பொருள் : அனல் மின் நிலையங்கள் – முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பொறுப்புக்கு இணையாக தரம் உயர்த்தி– தலைமை நிர்வாக அலுவலர் (Chief Administrative Officer) பொறுப்பு அனுமதிக்க வேண்டுவது – சம்மந்தமாக.

பார்வை : ( Per ) CMD.TANGEDCO Proceedings No. 305, dated 08-12-2014

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள அனல் மின் நிலையங்களில் நிர்வாகத் தொகுப்பில் முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பு அனுமதிக்கப் பட்டிருந்த்து. மற்ற ஒன்பது மண்டலத் தலைமைப்பொறியாளர் அலுவலகங்களிலும், நிர்வாக அலுவலர் பொறுப்பும், வட்ட அலுவலகங்களில் உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பும் அனுமதிக்கப் பட்டிருந்தது.

-- 12 10 2014 அன்று பெரம்பலூரில் நடைபெற்ற எங்களது சங்க மாநிலப் பொதுக்குழு தீர்மான எண் 33ன் வாயிலாக மத்திய அலுவலக நிர்வாகத் தொகுப்பில் உள்ள உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பை நிர்வாக அலுவலர் பொறுப்பாகவும், மண்டலத் தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள நிர்வாக அலுவலர் பொறுப்பை முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பாகவும், அனல் மின் நிலையங்களில் உள்ள முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பொறுப்புக்கு இணையாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.

எங்களது கோரிக்கையின்படி பார்வையில் கண்டுள்ள வாரிய உத்திரவின்படி ஒன்பது மண்டலத் தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள நிர்வாக அலுவலர் பொறுப்பை முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பாகவும், 42 வட்ட அலுவலகங்களில் உள்ள உதவி நிர்வாக அலுவலர் பொறுப்புகள் நிர்வாக அலுவலர் பொறுப்பாகவும், தரம் உயர்த்தி அனுமதிக்கப் பட்டமைக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

--2

நிர்வாகப் பிரிவில் பதவி உயர்வு வாய்ப்பை சீரமைத்திட கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

| | | | |
|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 576 | வாரியத்தில் விநியோக, பொதுநிர்மான வட்ட, நீர் மற்றும் அனல் மின் நிலையங்களிலுள்ள நிர்வாகப் பிரிவுகளில் |
| 2 | நிர்வாக உதவியாளர் | 1592 | ,, |
| 3 | நிர்வாக மேலாளர் | 428 | ,, |
| 4 | உதவி நிர்வாக அலுவலர் | 219 | மின் விநியோக வட்ட, கோட்ட அலுவலகங்கள் |
| 5 | நிர்வாக அலுவலர் | 9 | மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் ஒன்று வீதம் ஒன்பது பொறுப்புக்கள் |
| 6 | முதுநிலை நிர்வாக அலுவலர் | 4 | அனல் மின் நிலையங்கள் |

சங்கங்களின் கோரிக்கையை ஏற்று பதவி உயர்வு வாய்ப்பினை விரிவு படுத்திடும் வகையில் வட்ட அலுவலகங்களில் இருந்த உதவி நிர்வாக அலுவலர் பதவிகளை நிர்வாக அலுவலர்களாக மாற்றியதன் வகையில் 42 கூடுதல் பொறுப்புக்களும், மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் நிர்வாக அலுவலர் பதவியினை, முதுநிலை நிர்வாக அலுவலர்களாக உயர்த்தியதன் வகையில் 9 கூடுதல் பொறுப்புக்களும் வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆனால் தற்போதைய நிலையில், அனல் மின் நிலையங்களில் ஏற்கனவே மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் இருந்த நிர்வாக அலுவலருக்கு அடுத்த உயர் பதவியான முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பு உயர்த்தப் படாமல் அப்படியே விடப்பட்டுள்ளது

நிர்வாகப் பிரிவில் பதவி உயர்வு வாய்ப்பினை மேம்படுத்திடும் பொருட்டு மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் நிர்வாக அலுவலர் பொறுப்பும், அனல் மின் நிலையங்களில் முதுநிலை அலுவலர் பொறுப்பும் அனுமதிக்கப் பட்டிருந்தது போன்று. தற்போது மண்டல அலுவலகங்களில் நிர்வாக அலுவலர் பொறுப்பினை முதுநிலை நிர்வாக அலுவலராக உயர்த்தப் பட்டிருப்பதால் ஏற்கனவே இருந்த நடைமுறைப்படி அனல் மின் நிலையங்களில் இருக்கும் முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பினை முதன்மை நிர்வாக அலுவலராக ((Chief Administrative Officer)) அனல்மின்நிலையங்களில் இருக்கும் நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பொறுப்பிற்கு இணையாக உயர்த்திட உத்திரவு வழங்குமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்

நகல் ; தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / சென்னை – 2